மங்கள வைபவங்களுக்
கேற்ப, உடுபுடைவைகள்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

★ காஞ்சிபுரம்
★ பெனுரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஞூ சித்திரை மீ 08 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 14 (21-04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-115

## வட பிராந்தியத்துக்கு மேலும் 7 சொகுசு பஸ்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21
வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு மேலும் ஏழு சொகுசு பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இச் சொகுசு பஸ்கள் 2 ஏற்கனவே வ. பி. போ. சபைக்கு வழங்கப்பட்டிருந்ததும் அவை தற்பொழுது யாழ். — கொழும்பு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதும்தெரிந்ததே.

இவற்றை விட மேலும் ஏழு பஸ்கள் வ.பி.போ. சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் மூன்று பஸ்கள் நேற்று கொழும்பிலிருந்து யாழ்நகருக்குக் கொண்டுவரப்பட்டன. ஏனைய நான்கு பஸ்களும் அடுத்த சில தினங்களில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவை கோண்டாவில், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய டிப்போக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட உள்ளன.

(ஒ-9)

## மினிபஸ் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது

### மினிபஸ் சங்க செயலாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21
எரிபொருள் விலை அதிகரித்துள்ள போதிலும் வட பிராந்தியத்தில் எந்த ஒரு பகுதியிலும் மினிபஸ் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை; அதிகரிக்கப்படவும் மாட்டாது.

இவ்வாறு வட பிராந்திய மினி பஸ் சங்க சமாசத்தின் பொதுச் செயலாளர் திரு. இ. செல்வராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிப்பை உத்தேசித்து கட்டண அதிகரிப்பை ஏற்படுத்த வேண்டாம் என்று மினி பஸ் உரிமையாளர்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் கூறியதாவது;-

இங்கு சேவையில் உள்ள மினிபஸ்களில் ஏறத்தாழ அனைத்து பஸ்களும் ஜப்பானிய தயாரிப்புக்களே. ஜப்பானிய உதிரிப் பாகங்களின் விலையும் நாணய பெறுமதியும் அண்மையில் அதிகரித்துள்ளன. இந்நிலையில் எமது மினி பஸ்களின் பராமரிப்புச் செல

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இந்தியாவிடம் இருந்து 2 ஆயிரம் பஸ்களை இலங்கை அரசு வாங்கும்

திருச்சி, ஏப்ரல் 21
இந்தியாவில் இருந்து 2 ஆயிரம் பஸ்கள், அவற்றுக்குரிய உதிரிப்பாகங்கள் மற்றும் 50 ரயில்பெட்டிகள் ஆகியவற்றை இலங்கை கடன் அடிப்படையில் வாங்கவுள்ளது.

போக்குவரத்துத் துணை அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி நேற்று திருச்சியில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், இலங்கையில் ரயில் போக்குவரத்துச் சேவையில் 28 ஆயிரம் பேரும் வீதிப் போக்குவரத்துச் சேவையில் 60 ஆயிரம் பேரும் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்களுக்கான நவீன பயிற்சி வசதிகளைச் செய்து கொடுக்கும்படி தமிழக அரசையும் மத்திய அரசையும் அணுகியுள்ளேன்.

இது தொடர்பாக தமிழக மாநில போக்குவரத்து அமைச்சரை சென்னையில் சந்தித்தேன்.

இப்படி திரு. செல்லச்சாமி சொன்னார். (ஓ-எ)

## வீஸா இன்றி பயண வசதி மலையகத் தமிழருக்கு வேண்டும்

### செல்லச்சாமி வேண்டுகோள்

சென்னை, ஏப்ரல் 21
வீஸா இன்றி இலங்கை-இந்திய நாடுகளுக்கு இடையே போக்குவரத்துச் செய்ய இலங்கைக் குடியுரிமை பெற்ற இந்திய வம்சாவளியினரை இரு நாடுகளின் அரசுகளும் அனுமதியளிக்க வேண்டும்.

இவ்வேண்டுகோளை போக்குவரத்துத் துணை அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி விடுத்திருக்கிறார்.

சார்க் அமைப்பு நாடுகளிடையே வீஸா இன்றி போக்குவரத்துச் செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்படவேண்டும்.

முதற் கட்டமாக இச் சலுகை இலங்கைக் குடியுரிமை பெற்ற இந்திய வம்சாவளியினருக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் திரு. செல்லச்சாமி திருச்சியில் வைத்து தெரிவித்தார். [ஓ-எ]

## முன்னாள் வேட்பாளர் கல்வியங்காட்டில் கொலை

கடந்த பெப்ரவரியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் நேற்று கல்வியங்காடு பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் கல்வியங்காட்டைச் சேர்ந்த முத்தையா செல்லையா [வயது 58] என்பவராவர்.

இவர் புளொட் இயக்கத்தின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் சார்பிலேயே தேர்தலில் போட்டியிட்டார்

(ஒ-9-13)

## ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சை ஜூலை 22இல் ஆரம்பமாகும்

ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை வருகிற ஜூலை மாதம் 22ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 14 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அதே சமயம் லண்டன் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை வருகிற ஜூன் மாதத்தில் நடத்தப்படும்.

லண்டன் பரீட்சைக்குச் சுமார் 600 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (ஒ-எ)

### பிரச்சினைகளுக்கான காரணங்களைத் தெரிந்து கொண்டு

# பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க சகல முயற்சிகளும் செய்வேன்

## ஜனாதிபதி பிரேமா நயினாதீவில் வைத்து நேற்று இவ்வாறு உறுதியளித்தார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21
பிரச்சினைகளுக்கான காரணங்களைத் தெரிந்து கொண்டு அவற்றை பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்கான சகல முயற்சிகளையும் நான் மேற்கொள்வேன்,

இவ்வாறு சிறப்புப்பெற்ற சித்திரா பௌர்ணமி தினமான, பக் நோன்மதி தினமான நேற்று நயினாதீவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச உறுதி அளித்தார்.

நேற்று சித்திராபூரணை தினமாகும். இந்துக்களுக்குச் சிறப்பான தினமாகக் கருதப்படும் இந்தப் பூரணை தினத்தைப் பௌத்தர்கள் பக் நோன்மதி என்று அழைப்பர். புத்தபெருமான் இரண்டாவது தடவையாக அந்தநாளிலேயே ஈழத்துக்கு வந்ததாகவும் கொண்டாடுவர்.

ஜனாதிபதி திரு, ஆர். பிரேமதாச, வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேயரத்தின சகிதம் நேற்று நயினாதீவுக்கு வந்தார்.

அவர் காலையில் நாகதீப ரஜமகாவிகாரைக்குச் சென்று விசேட பூசை வழிபாட்டில் கலந்துகொண்டார்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய சித்திரா பூரணை நண்பகல் விசேட பூசைகளிலும் ஜனாதிபதி பங்குபற்றினார்.

நாகதீப ரஜமகாவிகாரையில் நடந்த மதநிகழ்ச்சியில் பேசும்போது ஜனாதிபதி சொன்னதாவது:-

ஜனநாயகத்திற்கு மாறுக யாரும் செயற்பட்டால் அதற்கான காரணம் என்ன என்பதை நாம் அறிந்து பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே பொருத்தமானசெயல். அதற்கான சகல முயற்சிகளையும் நான் மேற்கொள்வேன்.

பிரச்சினைகள் தோன்றுவதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும்என்று புத்த பெருமான் நற்போதனை செய்திருந்தார்.

புத்தபெருமானின் இந்த உன்னத வாக்கினைக் கடைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



வீஸா இல்லாமல் போய் வந்தால் இலங்கையும் இந்தியாவும் ஒரே நாடாகிவிடும் எண்ட உன் நினைப்போ உவருக்கு.........!

## அரசு-விடுதலைப்புலிகள் பேச்சு அடுத்த வாரம் ஆரம்பமாகும்

### அமைச்சர் ரஞ்சன் தகவல்

கொழும்பு, ஏப்ரல் 21
இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் அடுத்தவாரம் ஆரம்பமாகும்.

இத்தகவலை நேற்று முன் தினம் வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கொழும்பில் வெளியிட்டார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர் மாநாட்டில் திரு விஜேரத்ன பேசினார். பேச்சுக்களை நடத்துவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அடுத்தவாரம் கொழும்பு வருவார் என்றும் அறிவிக்கப்பட்டது.

## பலியானோர் எண்ணிக்கை 349

கொழும்பு, ஏப்ரல் 21
நேற்று முன்தினம் முடிவடைந்த ஒரு வார கால போர் நிறுத்த காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் எல்லாமாக 349 பேர் கொல்லப்பட்டனர் என்று பொலீஸ் அறிக்கைகள் தெரிவித்தன.

(ஒ-எ)

## திருநெல்வேலியில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21
திருநெல்வேலி கிழக்கு, செங்குந்தா வீதியில் நேற்று முன் தினம் (புதன்கிழமை) இரவு 7-30 மணியளவில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது:

வீடு ஒன்றினுள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களைப் பயமுறுத்தி நகை, பணம் என்பவற்றை அபகரித்துச் சென்றனர். (ஒ)

## சூடுபட்டுக் காயம்

நேற்று நீர்வேலிப் பகுதியில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார்.

காயமடைந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த எஸ். சேனாதிராஜா என்பவராவார்.

[ஒ-9]

### வவுனியாவிலிருந்து

## யாழ். நோக்கிவந்த பஸ்மீது துப்பாக்கிச்சூடு:ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21
வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த அரச பஸ்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் பிரஸ்தாபபஸ்ஸின் மீது கல்வீச்சும் நடத்தப்பட்டது.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார். பஸ்ஸின் முன் பக்க கண்ணாடியும் நொருங்கியது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

பண்டிக்கேத்தகுளம் பகுதியில் பஸ் வந்து கொண்டிருந்த போதே துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு கற்களும் வீசப்பட்டன,

இதை அடுத்து பஸ் நிறுத்தப்பட்டது. ஆயுதபாணிகள் சிலர் அவ்விடம் வந்து நாம் கொள்ளையர் அல்ல ஒரு குழுவைச் சேர்ந்த சிலர் பயணம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### சுபநேரம்

வெள்ளிக்கிழமை
சித்திரை - 08
சுபநேரம்;
06.01 முதல் 07.31 வரை
ராகுகாலம்:
10.31 முதல் 12.01 வரை

## ஆழியவளை, வெற்றிலைக்கேணியில் தொடர்ந்து பதற்றம் நிலவுகின்றது

தாளையடி, ஏப்ரல் 21
வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய கிராமங்களில் பதற்ற நிலை நீடிக்கிறது.

மீனவர்கள் தொழில் செய்வதற்கு தொடர்ந்தும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

சித்திரை வருடப் பிறப்புத் தினத்துக்கு முதல் நாள் (13 ஆம் திகதி) வெற்றிலைக்கேணி கடற்பிரதேசத்தில் காணப்பட்ட இரண்டு படகுகளின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து மோதல் இடம்பெற்றது.

பின்பு இரு படகுகளும் வெற்றிலைக்கேணி கரையோரத்தில் அநாதரவான நிலையில் கைவிடப்பட்டிருந்தன. அமைதிப் படையினர் படகுகளை எடுத்துச் சென்றனர்.

இதனை அடுத்து அப்பகுதியில் உள்ள கிராமங்களிலும், காடுகளிலும் தேடுதல் வேட்டைகள் ஆரம்பமாகின.

கடந்த திங்கட்கிழமை வெற்றிலைக்கேணி, ஆழியவளை, மண்டலாய் ஆகிய கிராமங்களும் அப்பகுதியில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இந்தியப் படை யுத்தநிறுத்தத்துக்கு அரசு - புலிகள் பேச்சில் வற்புறுத்தப்படும்

### "இந்து" சொல்கிறது இப்படி ஓர் ஊகம்

கொழும்பு, ஏப்ரல் 21
இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையே முழு அளவிலான நேரடிப் பேச்சுக்கள் நடத்தப்படும் சமயம் இந்திய அமைதிப்படையினர் யுத்தநிறுத்தம் ஒன்றை அனுஷ்டிக்கவேண்டும்.

இக்கோரிக்கையை [illegible] புலிகள் பிரதிநிதி திரு. அன்ரன் பாலசிங்கத்துக்கும் ஜனாதிபதியின் பிரதிநிதி திரு. கே. எச். விஜேதாஸாவுக்கும் இடையே அடுத்த வாரம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் பூர்வாங்கப் பேச்சுக்களின் போது திரு. பாலசிங்கம் முன்வைக்கக் [illegible] தாக 19-04-89 "இந்து" ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்தநிறுத்தம் அனுஷ்டிக்கப்பட்டால் தான் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத் தலைமைத்துவம் வெளிப்பட்டு பேச்சுக்களில் கலந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என்

[6 ஆம் பக்கம் பார்க்க]

உதயன் வெளியீட்டகத்தின்



இந்து மத மாத மஞ்சரி

ஞானக் கதிர்

இன்று வெளிவருகின்றது!

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை (21-04-1989) காலை 6-30 மணிக்கும் 7-30 மணிக்கும் இடையில் வரும் சுப வேளையில்

நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசார்ய ஸ்வாமிகள்
வெளியிட்டு வைப்பார்.

சமய ஆர்வலர்கள், அறிஞர்கள், பக்தர்கள், ஆன்மீகத் துறையில் ஈடுபாடுடைய அனைவரையும் அன்பு கொண்டு அழைக்கின்றோம்.

★ விநாயகப் பெருமானின் அழகிய வர்ணப் படம் முகப்பை அலங்கரிக்கிறது.
★ உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!
★ விலை ரூபா ஐந்து (5/-) மட்டுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Casio and Yamaha [Organs] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: No. 9 Aboobucker Road, Jaffna. (10640)

Honda C 90 (Econo-Power) புதியது சிவப்பு நிறம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R. தியாகராஜா, 18, அம்மன் ரோட், சுந்தர்மடம் யாழ்ப்பாணம். (19638)

Trailor Racing Motor Bicyle 50 CC விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: Dr. S. Thirunavukkarasu, Kaithady South, Kaithady. (196)

### அச்சகம் விற்பனைக்கு

உன்னதமான நிலையிலுள்ள ஒட்லி சிலிண்டர் அச்சியந்திரம், புத்தம் புதிய எழுத்துக்கள், சேஸ்கள் மற்றும் அச்சக உபகரணங்கள் புதியவை. உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்: முகாமையாளர், மலரகம், ஏழாலை வடக்கு, ஏழாலை. [183]

### New City Traders

Daytron T. V. 12'', 14'' கறுப்பு வெள்ளை, Daytron T. V. 14'', 20'' கலர், Daytron வீடியோ கசெற், Phillips கசெற் ரெக்கோடர், Phillips Gas cooker மற்றும் வீட்டுக்கு தேவையான மின் உபகரண பொருள்களையும் பெற்றுக்கொள்ள New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/2291)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Cobb) புரொயிலர் குஞ்சு, (Dekalb) பிறவுண் சேவல் குஞ்சு (25. 4. 89) செவ்வாய்கிழமை விநியோகிக்கப்படும். சேவல் குஞ்சு விலை ரூபா 4. 50 தொகையாக எடுப்பவர்களுக்கு விசேஷ சலுகை உண்டு. முன்கூட்டியே பதிவு செய்க. இல.9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் (10635)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமாயின ஒருநாள் லோமன் புரொயிலர்க் குஞ்சுகள், லோமன் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 29-4-1989 இல் விநியோகிக்கப்படும். 25-4-89க்கு முன் பதிவு செய்க. குஞ்சுகள் எடுப்பவர்களுக்கு மருந்துகள் இலவசமாக வழங்கப்படும். திருமகள் ஸ்ரோஸ் K. K. S. ரோட், லக்கிபாம் சென்ரர், திருநெல்வேலி சந்தி, C. S. K. ரேட் சென்ரர் 81 கச்சேரி- நல்லூர் ரோட், (197)

### தேவை

யாழ் நவீன சந்தையில் அமைந்துள்ளபான்ஸி கவுஸில் வேலை செய்வதற்கு 20 வயதுக்கு உட்பட்ட ஆண் விற்பனையாளர் தேவை. C/o, 487, உதயன். (209)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

ஒரு Ladies wrist watch (மணிக்கூடு) யாழ் ஆஸ்பத்திரி O. P. D. முன்பாக கண்டெடுக்கப்பட்டது. உரியவர் தகுந்த ஆதாரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 47, விதானையார் லேன், சுண்டுக்குழி யாழ்ப்பாணம் (10639)

### எமது சேவையில்

கலர் பிலிம் சுருள்கள் கொம்பியூட்டரில் Processing & Print பிரதி ஒன்று 4/75 மட்டுமே. அத்துடன் இலவசமாக அல்பம் [Album] குயிக் ஸ்ரார் [மனோகரா சந்திக் கண்மையில்] 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [10626]

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### ஆங்கிலப் புத்தகம்

ஆரம்பமுதல் G. C. E. (O/L) வரை இலக்கணம், அப்பியாசம், பேச்சுப்பயிற்சி முதலியவற்றை உள்ளடக்கிய புதுமையான முறையில் T. Rajalingam என்பவரால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகம்தான் Basic Grammar and Spoken Practical கிடைக்குமிடம் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (10620)

## மேல் மாகாணசபை அலுவலக கட்டட வசதிக்கு ஒரு கோடி ரூபா

மேல் மாகாண சபைக்கென நிர்மாணிக்கப்பட்ட பம்பலப்பிட்டியில் உள்ளகட்டடத்தில் அலுவலக வசதிகளைச் செய்வதற்காக 1 கோடி ரூபா ஒதுக்கப்படும்.

இது தொடர்பான தீர்மானம் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மேல் மாகாண சபை கூட்டத்தில் நிறைவேறியது.

முதலமைச்சர் இத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருந்தார்.

மேல்மாகாண சபையின் கூட்டம் சொழும்பு விஜயராம மாவத்தையிலுள்ள 'சவ்சிறிபாயா' சபா மண்டபத்தில்- பிரதித் தலைவர் திருமதி குலசீலி பெரேராவின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மேல்மாகாண சபை அபிவிருத்திக்கென ரூபா 19 கோடி 20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாணசபை சுகாதார பொருளாதார கட்டமைப்பு அமைச்சர் திரு. மஹிந்த சமரசிங்க எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் கேள்வி ஒன்றிற்குப் பதில் அளிக்கையில் குறிப்பிட்டார். [இ-7]


### நிவாரண உதவி வழங்கப்படவில்லை

நெடுந்தீவைச் சேர்ந்த மீனவர்களுக்கு நிவாரண உதவியாக ரூ 4000/-வழங்கும் பொருட்டு உரிய படிவங்கள் பூர்த்தியாக்கப்பட்டு நான்கு மாதங்களுக்கு மேலாகியும் நிவாரண உதவிகள் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. (ச-111)


# olivetti

PROFESSIONAL ELECTRONIC TYPEWRITER

the silent, smooth and intelligent, dependable office assistant.



Over 70 years in the fore-front of office equipment technology A guarantee of the precision, reliability and operating comfort of Olivetti typewriters.

Like these fully automatic, completely electronic models with a variety of script and functions that give you the choice of the right one for your exact need.



Assuring you of the ultimate in document presentation - typing quality and layout clarity that in themselves constitute a letter of introduction.

There's more to Olivetti than we can tell you here. Why not see it for yourself at our showrooms?

Backed by the excellent Olivetti after sales service

**OFFICE EQUIPMENT Ltd.,**
**140 Navalar Road,**
**Jaffna.**


## யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்ப நிறுவன பழைய மாணவர்களுக்கு ஓர் வேண்டுகோள்

மேற்படி நிறுவன பழைய மாணவர்கள் சங்கம் ஒன்றை அமைப்பதற்காக 23-4-89 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் ஒன்று கூட உள்ளோம். பழைய மாணவர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய மாணவர்கள்.

[219]


கப்பலில்

## ★ வேலை வாய்ப்புக்கள் ★

நான்கு கிரேக்க கப்பல்களில்
● உடனடி வேலை வாய்ப்புக்கள் ●

✶ 2nd Officers ✶ Bosan
✶ 3rd Engineer ✶ Oiler
✶ Radio Officers ✶ AB

மேற்காணும் பதவிகளுக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக வந்து தொடர்பு கொள்ளவும்.

✶ சுவிஸ் ✶ இத்தாலி
✶ பிரான்ஸ் ✶ ஜேர்மனி
✶ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்குப் போவதற்கும் உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

**NATIONAL SHIPPING & TRAVELS,**
New Lalitha Building
185/2, KASTHURIAR ROAD,
JAFFNA

(C/2284)


## நாலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இராஜதுரை உதயணன்

மண்ணில்: 17 - 06 - 1966
விண்ணில்: 21 - 04 - 1985

தமிழ் மண்ணுக்காய் மரணித்த - மாவீரனே
செந்தமிழர் சிந்தும் கண்ணீரால்
நனைந்து கொண்டிருக்கும் தமிழர் தாயகத்தை மீட்டெடுக்க
சுதந்திரத் தமிழர் கொடியைப் பறக்கவிட

அடிமைத் தனத்தின் விலங்கினை உடைக்க
உறுதி கொண்டெழுந்த செல்வமே - உதயணன்
நீ மறைந்து முடிந்த நாலாண்டை நினைக்கும் போது
எம் உள்ளம் எல்லாம் குமுறுதைய்யா

கண்ணீரை மாலையாக்கி, உன்பாத மலருக்கு
காணிக்கையாக்குகிறோம் - உதயணா
உன் ஆத்ம சாந்திக்காய் நாம் அனைவரும்
எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அப்பா, அம்மா, தம்பியர்
தங்கையர், நண்பர்கள்.

தகவல்:-
திரு.பொ. இராஜதுரை,
ராஜன் சைக்கிள் வேக்ஸ்,
பருத்தித்துறை.

(199)


## ★ இன்றைய திறப்பு விழாவில் ★

எமது புதிய வெளியீடுகள்

(1) ரகுவரன் — ராதிகா
ஊர்வசி — S. S. சந்திரன் ——
நடித்த

## இது உங்க குடும்பம்

(ஒறிஜினல்)

(2) சுமன் நடித்த

"ஜேம்ஸ் பொன்ட் 7 ஸ்ரார்ஸ்"
(சண்டைப் படம்)

## வீடியோ விமல்

117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி [மேல் மாடி]
யாழ்ப்பாணம்.

(10637)


## 6 ஆம் மாத கண்ணீர் அஞ்சலி



### திரு. வெற்றிவேலு இராஜேந்திரா

பிறப்பு: 26-04-1948
இறப்பு: 17-11-1988

அன்பின் திருவுருவாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் ஒளி விளக்காய், அன்போடும், ஆதரவோடும் எம்மை ஆதரித்து இடைநடுவில் ஆறுத்துயரில் ஆழ்த்தி மறைந்திட்ட எம் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:

தாய், மனைவி, பிள்ளைகள்,
மாமன், சகோதரர்கள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
மருமக்கள், உற்றார், உறவினர்.

பெரியகுளம்,
நெடுங்கேணி.

(210)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஆறுமுகம் பார்வதி

என்றும் எங்கள் நெஞ்சத்தில்
நீங்காது நிறைந்திருக்கும் எங்கள்
அன்புத் தாயாருக்கு எங்கள் வணக்கங்கள்.

மகன்: ஆறுமுகம் அருள்சோதி,
மகள்: திருமதி திரவியம் தவமணிதேவி.

'செல்லம் பூங்கா',
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

(123)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிக நேர ஊதியம் இல்லையேல் தொழிற்சங்க நடவடிக்கை

## உதவி வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ் - வவுனியா பிராந்தியத்தில் கடமையாற்றும் பதிவு செய்யப்பட்ட உதவி வைத்திய அதிகாரிகளுக்கான மேலதிக நேர ஊதியம் மீண்டும் வழங்கப்படாவிட்டால் தொழிற் சங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வட மாகாண பதிவு செய்யப்பட்ட உதவி வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

யாழ் - வவுனியா பிராந்தியத்தில் பதிவு செய்யப்பட்ட உதவி வைத்திய அதிகாரிகளுக்குரிய மேலதிக நேர ஊதியம் மறுக்கப்பட்டுள்ளது பற்றி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இவ்வூதியம் ஏனைய மாவட்டங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு அளிக்கப்பட்டுவருகின்ற போதிலும் யாழ் - வவுனியர் பிராந்தியங்களில் மறுக்கப்பட்டது குறித்து கூட்டத்தில் ஆழ்ந்தகவலை தெரிவிக்கப்பட்டது.

அமைச்சின் சுற்றறிக்கையின் படி இக் கொடுப்பனவு உடன் கொடுபடாத பட்சத்தில் தொழிற் சங்க நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. [இ]

# கெடெக்ஸ் உதவியுடன் மண்ணித்தலையில் பாடசாலை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

கிளிநொச்சியின் ஒரு பின்தங்கிய பகுதியான பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கெடெக்ஸ் ஸ்தாபனம், அரசாங்க அதிபரினால் தெரிவு செய்யப்பட்ட பின்தங்கிய கிராமங்களான கௌதாரிமுனை, நாச்சிக்குடா, சுண்ணவில், பல்லவராயன் கட்டு, பாலாவி போன்றவற்றில் பல சமூக பொருளாதார அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டுள்ளது.

கெடெக்ஸ் ஸ்தாபனம் ஆரம்பத்தில் கௌதாரிமுனைக் கிராம சேவைப் பிரிவில் உள்ள மண்ணித்தலை கிராமத்தில் சிறுவர் பாடசாலை ஒன்றை அமைத்துள்ளது.

கௌதாரிமுனை கிராம சேவையாளர் திரு. தி. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்பாடசாலையின் திறப்பு விழாவில் கெடெக்ஸ் தாபன நிர்வாக அதிகாரி திரு. எஸ். ஞானசேகரம், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உபதலைவர் திரு. பொ. தங்கராசா கெடெக்ஸ் ஸ்தாபனத்தின் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. அ. ந. நாகராசா, மண்ணித்தலை கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. இ. ஸ்ரீராமன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

# நல்லதோர் சமுதாயம் உருவாக வழிவகுக்கப்பட வேண்டும்

## பாலர் பாடசாலை ஆசிரியர் கருத்தரங்கில் உரை

காங்கேசன்துறை, ஏப். 21

நற்பண்புகளை வளர்ப்பதில் இளம் வயதினர் கவனம் செலுத்த வேண்டும். எதிர்காலத்தில் நல்லதோர் சமுதாயம் உருவாக வழிவகுக்க வேண்டும்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மகளிர் குழுவின் ஆதரவில் இடம்பெறும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஐந்துநாள் பயிற்சிக்கருத்தரங்கு ஆரம்ப வைபவத்தில் கலந்துரையாற்றிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு கூறினார்.

தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்க மண்டபத்தில் திரு.எஸ் சிவமகாராசா தலைமையில் நடந்த இந்தவைபவம் மகளிர் குழுத்தலைவி செல்வி சசிதேவி கந்தையாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது.

யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். நித்தியராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

தலைவர் தமது உரையில்: இந்த பயிற்சி நெறிக்கு கல்வித் திணைக்களத்தின் அனுமதியும் கிடைத்திருப்பதால் பயனுள்ள முறையில் இதனைப் பயில பயிற்சியாளர்கள் முன்வரவேண்டுமென கேட்டுக் கொண்டார்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இவ்வாறான பணிகளை கூட்டுறவு உதவி ஆணையாளரும், மற்றும் அதிகாரிகளும் பாராட்டிப் பேசினர். (இ-68)

## சோதனை

வடமராட்சி, ஏப்ரல். 20

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் சென்றவர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை வந்தவர்களும் உடுப்பிட்டி, நெல்லியடி. வல்லை, புத்தூர் போன்ற இடங்களில் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டது. (க-160)

# ஈச்சிலம்பத்தை கொத்தணி மே மாதத்திலிருந்து இயங்கும்

மூதூர், ஏப்ரல் 21

ஈச்சிலம்பத்தை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேசப் பாடசாலைகள் தனியான கொத்தணி அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதற்கான நடவடிக்கையை திருகோணமலை மாவட்டக் கல்வி அலுவலகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

ஈச்சிலம்பத்தை புதியகல்விக் கொத்தணி எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியில் இருந்து இயங்கவிருக்கின்றது.

ஈச்சிலம்பத்தை பிரதேசத்தில் உள்ள ஈச்சிலம்பத்தை அரசினர் தமிழ் வித்தியாலயம், கறுக்காமுனை அரசினர் தமிழ் வித்தியாலயம், இலங்கைத்துறைமுகத்துவாரம் அரசினர் தமிழ் வித்தியாலயம், முட்டுச்சேனை அரசினர் தமிழ் வித்தியாலயம், வாழைத்தோட்டம் அரசினர் தமிழ் வித்தியாலயம், மாவடிச்சேனை அரசினர் தமிழ் வித்தியாலயம், வெருகல் முகத்துவாரம் அரசினர் தமிழ் வித்தியாலயம், பூநகர் அரசினர் தமிழ் வித்தியாலயம் முதலான எட்டுப்பாடசாலைகள் இப்புதிய கொத்தணி அமைப்பில அடங்குகின்றன.

ஈச்சிலம்பத்தை கொத்தணியின் முதன்மைப் பாடசாலையாக ஈச்சிலம்பத்தை அரசினர் தமிழ் வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (ச.98)

## இரவுக்காட்சி

மட்டக்களப்பு நகரிலுள்ள சினிமா தியேட்டர்களில் சுமார் ஒன்றரை வருடகால இடைவெளியின் பின்பு இரவு காட்சிகள்நடைபெறுகின்றன (இ-21]


உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப்பெறுவதற்கான

கம்பியூட்டர் கல்வி

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்: 30. 04. 1989
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)

சேரும்போது செலுத்தவேண்டியது ரூ. 500/- மாத்திரம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி. குளிரூட்டப்பட்ட அறையில் (IBM COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால், விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்துகொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 29. 04. 1989




UNIKCO COMPUTER CENTRE

No. 5, மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)

(சி/2301)


## ஜனாதிபதி விசாரணைக்குழு

கொழும்பு, ஏப்ரல் 21

ஜெயவர்த்தன அரசில் முக்கிய அமைச்சராகப் பதவி வகித்துப் பின்னர் கட்சியில் இருந்து வெளியேறிய ஒருவரின் கடந்தகால செயல்களை விசாரிக்க ஜனாதிபதி விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்படலாம்.

அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

விசாரணைக்குத் தேவையான தகவல்களை திரட்டுவதில் இரகசிய பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என்று சொல்லப்படுகிறது. (இ·எ)

## அலுவலகங்கள் மூடப்பட்டன

கரவெட்டி, ஏப்ரல் 21

நெல்லியடியில் இருந்த சில இயக்க அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன.

கடந்த 15ஆம் திகதி முதல் இம்முகாம்கள் மூடப்பட்டுள்ளன. (க-70)

## படையினரின் ஆலய வழிபாடு

மட்டக்களப்பு. ஏப்ரல் 21

மட்டக்களப்பிலுள்ள இந்தியப்படை உயரதிகாரிகள் புத்தாண்டு தினத்தன்று ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயம் சென்று வழிபாடு செய்தனர்.

அவர்கள் சீருடையின்றி வேட்டி அணிந்து சாதாரண உடையில் வருகை தந்து வழிபாடு செய்தனர்.

ஆலய வருடாந்த தீர்த்த உற்சவத்திற்கான அன்னதான பொருள்களையும் அவர்கள் வழங்கினர். [ஒ-21)

## மீண்டும் தடை

பச்சிலைப்பள்ளி, ஏப்ரல் 21

புத்தாண்டு தினத்தன்று தொடக்கம் போக்குவரத்துக்காக திறந்துவிடப்பட்ட பளை, மீசாலை புத்தூர்ச் சந்தி முகாம்களுக்கு முன்பாக உள்ள கண்டி பிரதான வீதி மீண்டும் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் ஒழுங்கைகள் ஊடாக முகாமைத் தாண்டி பிரதான வீதியில் ஏறிச் செல்கின்றன. (ஒ-117)


கண்டு களியுங்கள்
சிங்கப்பூர், பாங்கொக், மாலே!

படம் பிடியுங்கள்! நெஞ்சை கொள்ளைகொள்ளும் காட்சிகள் நிறைந்த சிங்கப்பூர், பாங்கொக், மாலே ஆகிய இடங்களுக்குச் செல்லும் அரிய வாய்ப்பைப் பெறுங்கள். ஆம், கொடக் வழங்கும் 'கண்டு களியுங்கள்' போட்டியில் வெற்றியீட்டுவோருக்கே இந்த வாய்ப்பு வழங்கப்படவிருக்கின்றது. நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். கீழ்க் காணப்படும் கேள்விக்கான விடையை எழுதி அதனை கொடக் கலர் புகைப்படச் சுருள் ஒன்றின் வெற்றுப் பெட்டியுடன் மில்லர்ஸ் லிமிட்டெட், 50,யோக் வீதி கொழும்பு 1. என்ற முகவரிக்கு ஆனி 15ம் திகதி 89 க்கு முன் அனுப்பி வையுங்கள்.

கொடக்கினால் மாத்திரமே வழங்கக்கூடிய நிஜவர்ணங்களின் உயிர்த்துடிப்பையும் இங்கிதமான உள்ளுணர்வுகளையும் விரும்பி நாடும் அதிஷ்டசாலிகளான படப்பிடிப்பாளர்களுக்கென 410 பரிசுகள் காத்திருக்கின்றன.

மகத்தான இறுதிச் சீட்டிழுப்புப் பரிசுகள்

1ம் பரிசு — சிங்கப்பூர் சென்று திரும்புவதற்கான விமானப் பயணச்சீட்டும் கைச்செலவுக்கு 100 அமெரிக்க டொலர்களும்.
2ம் பரிசு — பாங்கொக் சென்று திரும்புவதற்கான விமானப் பயணச்சீட்டும் கைச்செலவுக்கு 100 அமெரிக்க டொலர்களும்.
3ம் பரிசு — மாலே சென்று திரும்புவதற்கான விமானப் பயணச்சீட்டும் கைச்செலவுக்கு 100 அமெரிக்க டொலர்களும்.
4ம் - 10ம் பரிசுகள்: 07 கொடக் புகைப்படக் கருவிகள் (கமரா)
11ம் - 110ம் பரிசுகள்: 100 கொடக் பணப்பைகள்.

மேலும்

மே 1, மே 15, மே 31 ஆகிய தினங்களில் 3 சீட்டிழுப்புகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு சீட்டிழுப்பிலும் 100 கொடக் ரி-சேட்டுகள் பரிசாக வழங்கப்படும். எனவே விரையுங்கள் கண்ணுக்கு விருந்தளிக்கும் வெளிநாட்டு விடுமுறைப் பயண வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள உங்கள் கமராவுக்கு வேலை கொடுங்கள்!

போட்டி விதிகள்

1. மில்லர்ஸ் லிமிட்டெட், தொம்ஸன் லங்கா (தனியார்) நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் நெருங்கிய குடும்பத்தினரும் தவிர்ந்த இலங்கைப் பிரஜைகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
2. போட்டி முடிவு தினம் ஆனி 15ம் திகதி. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. கடிதத் தொடர்புகளுக்கு இடமில்லை.
3. ஒருவர் எத்தனை பிரவேசப் பத்திரங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் கொடக் கலர் ஃபில்ம் வெற்றுப்பெட்டி இணைக்கப்பட வேண்டும். பிரவேசப் பத்திரக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கொடக் கலர் ஃபில்ம் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம். பிரவேசப் பத்திரங்களை அனுப்ப வேண்டிய முகவரி: மில்லர்ஸ் லிமிட்டெட் 50, யோக் வீதி கொழும்பு 1.




பிரவேசப் படிவம்

கேள்வி: சோல் நகரில் 1988 இல் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டு விழாவின் உத்தியோகபூர்வ புகைப்படச்சுருள் எது?

பதில்: ____________ பெயர்: ____________

முகவரி: ____________

மேலதிக படிவங்கள் தேவைப்படின் நீங்களே தயாரித்துக் கொள்ளலாம். சகல பிரவேசப் படிவங்களும் மில்லர்ஸ் லிமிட்டெட், 50, யோக் வீதி கொழும்பு 1. என்ற முகவரிக்கு ஆனி 15ம் திகதி 89 க்கு முன் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கொடக் கலர் ஃபில்ம் போட்டி' என்று குறிப்பிடவும்.

வர்ணத்தின் எழில் ஜாலங்கள் காட்டும்கொடக்.

PRODUCTS BY Kodak

JWT ML 2828


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம்

# ஒப்பந்தகாரரைப் பதிவுசெய்தல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகள், சுகாதார நிறுவனங்கள் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தம் செய்வதற்கென பதிவுசெய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்காணும் வேலைகள் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கட்டிடம் அமைத்தல், கட்டிடத் திருத்த வேலைகள் போன்றவை.
2. தண்ணீர் இறைக்கும் மின் - டீசல் இயந்திரங்கள் திருத்த வேலை.
3. தண்ணீர் குழாய், மலசலகூடம், குளியலறை தளபாடங்கள் புதிதாக மாற்றுதல் அல்லது திருத்துதல்.
4. மின்சார வேலைகளும், மின்சார உபகரணங்கள் திருத்துதலும்.
5. தட்டச்சு இயந்திரம், கல்லச்சு இயந்திரம் (Roneo Machine), போட்டோ பிரதி இயந்திரம் (Photostat Machine) திருத்துதல்.
6. குளிர்சாதனப் பெட்டி (Refrigerator) திருத்துதல்.
7. ஆஸ்பத்திரி / வைத்தியசாலை இரும்புத் தளபாடங்கள் திருத்துதல்.
8. வாகனங்களில் (Lorries) மருந்து வகைகள் மற்றும் தளபாடங்கள் ஏற்றிச் சென்று மருத்துவமனைகளில் இறக்குதல்.

ஒப்பந்தகாரர்கள் முன்னர் செய்த வேலைகள் சம்பந்தப்பட்ட ஒப்பந்த அத்தாட்சிப் பத்திரத்துடன் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ 1989-05-08 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், இல. 57, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல்'' என்று எழுதப்பட்டிருக்க வேண்டும்.

பதிவு செய்வதற்கான கட்டணம் ரூபா 100/- ஆகும். காசாகவோ அல்லது தபால் கட்டளை மூலமாகவோ சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்தே வழமையாக ஏற்றுக்கொள்ளப்படும். எனினும் இதற்கு மாறாகச் சில சந்தர்ப்பங்களில் வேறு தாபனங்களிடமிருந்தும் தேவையேற்படும் பொழுது கேள்விப்பத்திரங்களை அவர்களுக்கு வழங்கும் உரிமையை சுகாதார திணைக்கள கேள்விச் சபைத் தலைவர் கொண்டிருப்பார் என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ந. கனகசபை,
சு. சே. பி. பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

17-04 1989 [C/2219]


## சுஜேரா ரவல்ஸ்

# வெற்றிடங்கள்

சவூதி அரேபியா (Saudi Arabia)

| | |
|---|---|
| House Maids | (பெண்கள்) |
| Labourers | (ஆண்கள்) |
| Cleaners | (ஆண்கள்) |

தைவான் (Taiwan)

தைவானுக்குப் போக விரும்புவோர் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். ஆங்கில அறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
மூன்று கிழமைகளில் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

**சுஜேரா ரவல்ஸ்**
21, வேம்படி றோட், யாழ்ப்பாணம்.
(/2288)


## நான்காவது ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம் 11-12-1955



மரணம் 21-04-1985

ஜெயபாரதி பாலசுப்பிரமணியம்

மரணங்கள் இங்கு மலிவாகிவிட்ட போதிலும்
துன்பங்கள் இங்கு தொடர்ந்திட்ட போதிலும்
காலங்கள் கணப்பொழுதாகி விட்டாலும்
உனது இழப்பு ஈடுசெய்ய முடியாதது:

உனது பிரிவால் துயருறும்
அன்புப் பெற்றோர், அன்புச் சகோதரிகள்
கோண்டாவில்
(186)

மலையகத்தில்

# பொலீஸ் பாதுகாப்புடன் ஆசிரியர் நேர்முகப் பரீட்சை

## வடக்கு - கிழக்கிலிருந்து சென்றவர்களுக்கு பயமுறுத்தல்

நுவரெலியா, ஏப்ரல் 21
மலையகத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சை பொலீஸ் பாதுகாப்புடன் நடைபெற்றது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து சென்ற விண்ணப்பதாரர்களுக்கே நேர்முகப் பரீட்சை பொலீஸ் காவலுடன் நடத்தப்பட்டது.

மலையக ஆசிரியர் பதவிகள் மலையகத் தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்தே பொலீஸ் காவலுடன் நேர்முகப் பரீட்சைகள் நடந்தன.

மலையக ஆசிரியர் நியமனத்தில் வெளியார் இடம்பெற்றால் மலையக இளைஞர்களின் வேலைவாய்ப்பு குறையும் என்று சில மலையக வாலிபர்கள் புகார் கூறியதை அடுத்து-

மலையக அரசியல் பிரமுகர் ஒருவர் தலைமையில் கடந்த 11 ஆம் திகதி நுவரெலியா கல்வித் திணைக்களத்தின் அருகே சுலோக அட்டைகளுடன் கூடி நின்று ''மலையக ஆசிரியர் நியமனத்தில் வெளியார் இடம்பெறக் கூடாது'' என கோஷம் எழுப்பினர்கள்.

இதேவேளை நேர்முகப் பரீட்சைக்கு வந்தவர்களை வழிமறித்து, அவர்கள் மலையகத்தைச் சேர்ந்தவர்களா அல்லது வடக்கு - கிழக்கைச் சேர்ந்தவர்களா என விசாரித்து மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களை மட்டும் நேர்முகப் பரீட்சைக்குச் செல்ல அனுமதித்தனர். ஏனையோர்களைக் கலந்துகொள்ள விடாமல் தடுத்தார்கள். சாவகச்சேரி, நுணாவிலைச் சேர்ந்த பெண் ஒருவரை ஏன் நீங்கள் எமது வேலைவாய்ப்பில் குறுக்கிடுகின்றீர்கள்' என்று கேட்டு அவரை கல்வித் திணைக்களத்திலிருந்து நுவரெலியா நகர்வரை மூன்று முறை துரத்தி உள்ளார்கள்.
(அ-58)

## 51ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஏப்ரல் 21
கடந்த 13 ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 51 ஆக அதிகரித்துள்ளது. (ஒ-எ)

## தடைகளால் பயணிகள் அவதி

கரவெட்டி, ஏப்ரல் 21
நெல்லியடி பஸ் நிலையத்தைச் சுற்றிலும் தடைகள் போடப்பட்டுள்ளன.

இத்தடைகளால் கொடிகாமம், பருத்தித்துறை செல்லும் பயணிகள் பஸ்களில் ஏறுவதற்கு மிகவும் அவதிப்படுகின்றனர். (க-70)

# யாழ். அப்போதிக்கரீஸ் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

## இன்று பாஷையூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21
யாழ் உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் 'யாழ் அப்போதிக்கரீஸ் கிண்ணத்துக்கான' 11 பேர் கொண்ட லீக் முறையிலான உதைபந்தாட்டப் போட்டி பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

இந்தப் போட்டியில் 'ஏ' பிரிவில் கிறீன்பீல்ட், சென். அன்ரனீஸ், பொற்பதி, அரியாலை, பாடும்மீன், சென். நீக்கிலஸ், சென். மேரிஸ், யாழ். முஸ்லிம்ஸ் ஆகிய கழகங்களும்.

'பி' பிரிவு 1 இல் பாடும் மீன் [நீலம்] யாழ் முஸ்லிம்ஸ், வைக்கிங்ஸ், சென் அன்ரனீஸ், சென் றேக்ஸ், சென் மேரிஸ் ஆகிய கழகங்களும்

'பி' பிரிவு 2 இல் யுத்கார்மல், சென் பிலிப்ஸ் (அல்லைப்பிட்டி), கிறீன் பீல்ட், கலைவாணி, அராலி சில்வஸ்ரார், பாடும் மீன் (சிகப்பு) ஆகிய கழகங்களும் மோதுகின்றன.

இப்போட்டிகள் இன்று 21-4-89 தொடக்கம் 18-6-89 வரை நடைபெறும்.

இன்றைய போட்டிகள் மாலை 3.15 மணிக்கு ஆரம்பமாகும். முதல் போட்டியில் 'பி' பிரிவு 1 ஐ சேர்ந்த பாடும்மீன் (நீ) கோஷ்டியும் சென் மேரீஸ் கோஷ்டியும் மோதுகின்றன.

4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் 'ஏ' பிரிவைச் சேர்ந்த கிறீன்பீல்ட் கோஷ்டியும் சென் அன்ரனிஸ் கோஷ்டியும் மோதுகின்றன.
(இ-க)


## வெளி நாடுகளில் வேலை வாய்ப்பு

தொழிலொன்றுடன் வெளிநாடு செல்லுங்கள். 30 நாடுகளில் 70க்கு மேற்பட்ட பல்வேறு தொழில்கள் (Jop Categories) உயர்தொழில் முதல் சிறுதொழில் வரை, 17 முதல் 50 வயது வரை ஆண்களும் பெண்களும் கட்டணம் எதுவுமில்லை. நீங்களே உங்கள் வெளிநாட்டுத் தொழிலதிபருடன் தொடர்புகொண்டு உங்கள் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். விண்ணப்பப் பத்திரம் மற்றும் விபரங்கள் அடங்கிய வழிகாட்டியைப் பெற்றுக்கொள்ள முதலில் சுய விலாசமிட்ட ரூபா 4/25 முத்திரை ஒட்டிய நீண்ட தபாலுறை அனுப்புக. நேரில் வரவேண்டாம்.

**Foreign Assignments.**
**Chunnakam.**
(208)

# Diploma in Computer Programming & Data Processing

| | BASIC | d Base lll+ |
|---|---|---|
| Duration | 4 months | 2 Months |
| Commencement | 24 - 04 - 89 | 02 -- 05 - 89 |
| Days | Mon., Wed. | Tue. Fri. |
| Time | 8.30 to 10.30 | 8.30 to 10.30 |
| Monthly Fees | 300/- | 600/- |

- Practicals on computers including I B M (Compatibles)
- More practical time
- Lectures by members of the Institute of Data Processing Management (London)
- Valuable Certificate

JOIN THE LEADERS

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
16, 3rd Cross Street,
(Near O. L. R. Church)
Jaffna.
[C-2278]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தாவரவியல் திரு. பாலா

**90 A/L - PHYSIOLOGY**
ஆரம்பம்: 22- 04- 89 (Sat) 2. 30 p. m.
91 A/L - அலகு 01
நடைபெறுகின்றது.
Sat / Sun 4. 30 - 5. 30

NIRU TUITION CENTRE, Kondavil. (2309)


## கண்ணீர் அஞ்சலி

புண்ணியமூர்த்தி உதயகுமார்
(சுபாஸ்)

14- 4- 89 அன்று கத்தர்மடச் சம்பவத்தில் மரணமடைந்த சுபாசுக்கு எமது கண்ணீர் பூக்களைக் காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.

பெற்றோர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(10632)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர் வீ. ராதாகிருஷ்ணன் (ரிங்கர்)
(ராதா)

தோற்றம்: 22 - 11 - 1955
மறைவு: 02 - 05 - 1988
திதி: 21 - 04 - 1989

வாழ்வெல்லாம் நான் துறந்து வாழ்ந்ததெல்லாம் உமை நினைத்து
எனைவெறுத்து நீர்சென்றும் ஏனிந்தவாழ்வெனக்கு
மண்ணிலே பிறந்துவிட்டால் மனமொத்து வாழவேண்டும்;
மனமிரண்டும் பிரிந்துவிட்டால் மடிந்துதான் சாகவேண்டும்.

ஆத்ம சாந்தியடைய தினமும் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

171/3, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.
[213]

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்: 05- 06- 1915



மறைவு: 25- 03- 1989

திரு. முருகேசு தம்பிராசா

சென்ற 25- 03- 89இல் சிவபதமடைந்த திரு. முருகேசு தம்பிராசா அவர்களின் வீட்டுக்கிரியை 24- 04- 89 திங்கட்கிழமை முற்பகல் 10. 00 மணியளவில் எமதில்லத்தில் நடைபெறும். அந்தருணம், உற்றார், உறவினர், நண்பர்கள் குடும்பசகிதம் வருகை தந்து வைபவத்தைச் சிறப்பித்து மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமக்கு உதவிகள் செய்து, ஆறுதல்கூறி இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி எமது துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

'கனக மாளிகை'
ஏழாலை மேற்கு.
சுன்னாகம்.

மனைவி: த. கனகம்மா
பிள்ளைகள், குடும்பத்தினர்.
[212]

## பொய்யா மொழி

**குறள்:**

நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்.

**பொருள்:**

நெஞ்சத்தை நிறுத்தி ஆளும் ஆற்றல் இல்லாதவர், தம் நெஞ்சில் வேறு பொருள்களை விரும்பிக் கூடும் பொதுமகளிரின் தோளைப் பொருந்துவர்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
21- 04 - 1989 த. பெ. இல: 23


## ஜனசக்தி வண்டியை எவ்வாறு செலுத்துவது?

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் ஜனசக்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுவிட்டன.

தென்னிலங்கைப் பகுதிகளில் மட்டுமன்றி, தமிழ்ப் பகுதிகளிலும் பூர்வாங்க வேலைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. உதவிக் குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல், அவர்களுக்கான கருத்தரங்குகள் என்று ஏகப்பட்ட காரியங்கள் இப்பிரதேசங்களில் நடக்கின்றன.

இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் அரசாங்க அதிகாரிகள், ஜனசக்தித் திட்டம் குறித்து ஒவ்வொருவர் ஒவ்வொருவகைக் கருத்தைத் தெரிவித்து வருகின்றனர். எனினும் கருத்துக்களில் முரண்பாடு இல்லை என்பதால் பரவாயில்லை.

ஜனசக்தித் திட்டம், வாழ்க்கை வசதி குறைந்து இருப்பவர்களுக்கு, வேலை வசதி இல்லாது இருப்பவர்களுக்கு, வருமானம் இல்லாதிருப்பவர்களுக்கு, அடிப்படை வசதிகளை அனுபவிக்க முடியாதவர்களுக்கு உதவி அவர்களுக்கு ஒரு திருப்தியான வாழ்க்கையை, தொழில் வாய்ப்பை உண்டாக்க வல்ல, வருமானம் தர உகந்த, அடிப்படை வசதிகளை உருவாக்க உதவும் திட்டமே என்பதே சாராம்சம் ஆகும்.

ஜனசக்தி என்பது மனித வளத்தில் நம்பிக்கை வைத்து ஜனநாயக வழியில் செய்யப்படும் திட்டம் என்று ஓர் உள்ளூர் அதிகாரி அர்த்தம் கூறியிருக்கிறார்.

மக்களின் அடிப்படைத் தேவைகளை வழங்குவதே ஜனசக்தியின் நோக்கம் என்று மற்றொரு அதிகாரி விளக்கம் கொடுத்திருக்கிறார்.

ஆனால் ஜனசக்தி செயலளவில் எவ்வாறு நடைமுறையாகி எப்படி முடியும் என்பதில் மக்களுக்கு ஏதோ குழப்பமும் கலக்கமும் உண்டு என்பதை மட்டும் அவதானிக்க முடிகிறது.

ஜனசக்தி திட்டத்தின் சிருஷ்டி கர்த்தாவான ஜனாதிபதி நினைத்தவாறு, அவர் மனதில் கற்பனை செய்தவாறு, அது ஈடேற்றப்படுமா என்ற கேள்வியும் தொக்கு நிற்கவே செய்கிறது.

ஏழைகளுக்கு வாழ்வளிப்பதாகக் கூறி, உழைப்பவர்களையும் சோம்பேறிகளாக்கும் திட்டமாக ஜனசக்தி உருமாறுமா?

சிலர் 'சும்மா' இருந்து அரசாங்க உதவியைப் பெறவும், அடுத்தவர்கள் கஷ்டப்பட்டு உழைக்கவும் வகைசெய்து சமுதாயத்தில் ஒரு புதிய வர்க்கத்தை உருவாக்கி மக்களை ஜனசக்தி பிளவுபடுத்துமா?

அதிகாரிகள் முகமன் செய்வார்கள், அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வார்கள் எனக்கருதி 'ஜனசக்தி' உதவி பெறுவோரைத் தெரிவுசெய்யும் பொறுப்பு பொதுமக்களிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இது ஒவ்வொரு ஊரும் இரண்டுபடவும், மக்கள் கன்னை பிரிந்து ஒரு சாரார் அடுத்த சாரார் மீது கல்லெறியவும் வழிவகுக்காதா என்பது அடுத்த கேள்வி.

இவ்வாறு பல சந்தேகங்களும், கேள்விகளும் ஜனசக்தியின் ஆரம்பகட்டத்திலேயே மக்களிடையே எழுந்துவிட்டன. இன்னும் பல மயக்க நிலைமைகளும், மாயை நிலைகளும் உருவாகலாம்.

அவற்றை எல்லாம் களைந்து நிலைமையைத் தெளிவுபடுத்தி, ஜனசக்தித் திட்டத்தை ஜனசக்தி திட்டமாகவே நடைமுறைப்படுத்த வழிவகைகள் கண்டறியப்பட வேண்டும்.

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டியாக, ஜனசக்திஆகிவிடக்கூடாது என்பதில் மக்களுக்கு அக்கறை இருப்பதில் வியப்பில்லை. அதனை வேறு விதமாக அர்த்தம் கொள்ளவும் கூடாது.

ஜனசக்தி ஒரு பாரம் நிறைந்த மிகப்பெரிய வண்டி. அதனைச் சரியான பாதையில், தட்டு முட்டுப் படாமல், இடறி எகிறிக் குடைசாயாமல் நுட்பத்துடனும், நுணுக்கமாகவும் செலுத்திச் செல்லவேண்டும்.

மனித வளத்தை உரிய விதத்தில் பயன்படுத்தி, உற்பத்தியைப் பெருக்கும் ஓர் ஆக்கபூர்வமான திட்டமாக ஜனசக்தித் திட்டம் அமையவேண்டும்.

## விளையாட்டு துறையில் பெண்கள் கூடுதலாக பங்குபற்ற வேண்டும்

வடபகுதியில் விளையாட்டு நிகழ்ச்சிகளில் பெண்கள் பங்குபற்றுவதும் அதற்கான பயிற்சிகளில் ஈடுபடுவதும் மிகக் குறைவாக இருக்கின்றது.

உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் நடைபெறும் விளையாட்டு விழாக்களில் யுவதிகள் பங்குபற்ற நிறைய வாய்ப்புக்கள் உண்டு. எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களை எமது யுவதிகள் நன்கு பயன்படுத்தி விளையாட்டு நிகழ்ச்சிகளில் கூடுதலாகப் பங்குபற்ற வேண்டும்.

புதுவருட தினத்தன்று சுருவில் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் சுருவில் கிராம சேவையாளர் திரு. க. சகாதேவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுருவில் சனசமூக நிலையத்தின் செயலாளர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கத்தின் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

விழாவில் திரு. கோ. இராசலிங்கம், திரு. அ. சிவபாலன், திரு. சு சிவசம்பு, செல்வன் க. இலங்காநேசன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

விழாவின் இறுதியில் 'சென்ற விபவ வருடமே' என்ற தலைப்பிலான கவியரங்கமும் சுருவில் இளைஞர்களின் தயாரிப்பான 'எனி ஓர் முடிவெடுப்போம்' என்ற நாடகமும் இடம்பெற்றன. [க-16]

## பமேலாவாக நடிகை ரேகா நடிக்கும் படம் தயாரிப்பு

புதுடில்லி, ஏப்ரல். 20

இந்திய அழகி பமேலா வாழ்க்கை சினிமாப் படமாகிறது.

பிரபல ஹிந்தி நடிகரும் தயாரிப்பாளருமான தேவ் ஆனந்த் படத்தைத் தயாரிப்பதுடன் நடிக்கவும் இருக்கிறார்.

பமேலாவாக பிரபல ஹிந்தி நடிகை ரேகா நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

படப்பிடிப்பு லண்டன், பாரிஸ், ஹொங்கொங், பாலி, பம்பாய் ஆகிய இடங்களில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### எதிர்ப்பு

ஜெருசலம், ஏப்ரல் 20

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் தேர்தல் நடத்தப்படுவதை பலஸ்தீன தாயக விடுதலைக்கிளர்ச்சித் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். (எ)

### மரணமானோர் தொகை 66

செவ்வாய் இடம்பெற்ற புதுடில்லி-கர்நாடக கடுகதி ரயில் விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 66 ஆக அதிகரித்தது. (எ)

## விலை உயர்வைக் கண்டித்து ஜோர்தானில் ஆர்ப்பாட்டம்

அம்மான், ஏப்ரல். 20

உணவுப்பொருள்களின் விலை உயர்வைக் கண்டித்து இரண்டாவது நாளாக ஜோர்தானின் சில நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நேற்றும் நடைபெற்றன.

மஹன் என்ற நகரில் நடந்த மோதல் ஒன்றில் 5 பேர் கொல்லப்பட்டனர்.

இதனிடையில், ஜோர்தானுக்கு வழங்கப்படும் உதவியை இரண்டு மடங்காக அதிகரிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவித்திருக்கிறார்.

ஜோர்தான்மன்னர் ஹுசேன் தற்சமயம் வாஷிங்டனில் திரு. புஷ்ஷுடன் பேச்சுக்களை நடத்திவருகிறார். (எ)

## பெரு நாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள் கைது!

லிமா, ஏப்ரல் 20

பெரு நாட்டின் இரண்டு பல்கலைக் கழகங்களைப் பாதுகாப்புப் படையினர் முற்றுகையிட்டுப் பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்பட்டது.

அவற்றில் சப்மெஷின் துப்பாக்கிகளும், ரைபிள்களும் இருந்தன.

இது சம்பந்தமாக 500 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டனர். பெரும்பாலானோர் பல்கலைக் கழக மாணவர்கள்.

இடதுசாரி கெரில்லாக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் துண்டுப்பிரசுரங்களும் பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டன. [எ]

## அத்திலாந்திக் கடலில் போர்க்கப்பல் வெடித்து 47 அமெரிக்க வீரர் பலி!

வாஷிங்டன், ஏப்ரல் 20

அத்திலாந்திக் கடலில் போர் ஒத்திகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் அமெரிக்கக் கடற்படையின் மிகப்பெரிய யுத்தக்கப்பல் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் 47 பேர் உயிரிழந்தனர்.

கப்பலின் பெயர் 'அயோவா' என்பது.

புவர்ட்டோ ரிக்கோ நாட்டின் கரையில் இருந்து 300 மைல் தொலைவில் அத்திலாந்திக் கடலில் போர் ஒத்திகை நடந்துகொண்டிருந்தது.

'அயோவா' கப்பலும் அதில் பங்குபற்றியது.

கப்பலில் இருந்து படையினர் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தபோது, கப்பலினுள் பெரிய வெடிச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து கப்பல் தீப்பற்றி எரியத் தொடங்கியது.

இரண்டு மணித்தியாலங்கள் போராடியே தீயணைக்கப்பட்டது.

ஒத்திகையில் கலந்துகொண்ட ஹெலிக்கொப்டர்கள் காயமடைந்தவர்களை ஏற்றி வேர்ஜினியா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றன.

வெடித்துச் சிதறிய கப்பலில் அணு ஆயுதங்கள் இருந்ததா? என்பது பற்றிய தகவல் எதையும் அமெரிக்க அதிகாரிகள் வெளியிடவில்லை.

இப்போர்க் கப்பல் 1943இல் இருந்து அமெரிக்கக் கடற்படையில் சேவையாற்றி வந்தது.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அனுதாபம் தெரிவித்தார். [எ]

### சட்டசபையில் பகிஷ்கரிப்பு

சென்னை, ஏப்ரல் 20

நேற்று தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தின் பிற்பகல் நிகழ்ச்சிகளை அ. தி. மு. க., இந்திரா காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த எம். எல். ஏக்கள் பகிஷ்கரித்தனர்.

கடந்த மாதம் சட்டசபை அமளி துமளியில் சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் எம். எல். ஏக்கள் மீது நடவடிக்கை எடுக்காததற்குக் கண்டனம் தெரிவிக்கும் முகமாகவே அவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். [ஒ-எ]

### அமெரிக்காவில் ஏழைகள் அதிகரிப்பு

வாஷிங்டன், ஏப்ரல் 20

அமெரிக்காவில் ஏழைகள் அதிகரித்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

கிராமப்புறங்களில் மக்கள் மத்தியில்தான் இந்த அதிகரிப்புக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

கிராமப்புறங்களில் 13.5 சதவீதத்தில் இருந்து 16.9 சதவீதமாகவும் நகரப்புறங்களில் 15.4 சதவீதத்தில் இருந்து 18.6 சதவீதமாகவும் அதிகரிப்பு உள்ளது. (எ)

### சீன மாணவருக்கு எச்சரிக்கை

பீகிங் நகரில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை அலுவலகம் முன்பு சீன மாணவர் நான்காவது தினமாக நேற்று நடத்திய ஆர்ப்பாட்டபேரணியைப் பொலீஸார் தடுத்து நிறுத்தினர்.

பேரணியை நடத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று சீனப் பொலீஸார் எச்சரித்தனர். (எ)

எல்சல்வடோர்

## கெரில்லாத் தாக்குதலில் சட்டமா அதிபர் மரணம்

எல்சல்வடோரின் சட்டமா அதிபர் ரொபர்டோ அஸ்டியா கவராலு குண்டுத்தாக்குதல் சம்பவம் ஒன்றில் கொல்லப்பட்டார்.

இடதுசாரிக் கெரில்லாக்கள் இக்குண்டுத் தாக்குதலை நடத்தியதாக அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சட்டமா அதிபரின் காரின் உட்புறம் குண்டு வைக்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் எல்சல்வடோர் தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கம் அமைத்த ஆறேன்கட்சி ஆதரவாளராக சட்டமா அதிபர் இருந்து வந்தார். (எ)

ரூ.4,000 வாக்குறுதி காற்றில்

## பூஸாவிலிருந்து விடுதலையானோர் திருமலையில் மீண்டும் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, ஏப்ரல். 21

பூஸாவிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்கள் இரண்டாவது தடவையாக திருகோணமலையில் பெரும் ஆர்ப்பாட்டமும் மறியல் போராட்டமும் நடத்தினர்.

கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை இவை இடம்பெற்றன.

சென்றகிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது 17 ஆம் திகதி இரண்டாவது கட்ட உதவியான ரூபா 4,000 தரப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

17ஆம் திகதி காலை1000 க்கும் அதிகமானோர் திருமலை உள்துறைமுக வீதியிலுள்ள உதவி - அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கு முன்னுள்ள பாதையில் கூடினர்.

நேரம் செல்லச் செல்ல கூட்டம் அதிகரித்தது.

உதவி - அரசாங்க அதிபரோ ஊழியர்களோ காரியாலயத்துக்கு வரவில்லை.

ஆகவே கூட்டத்தினர் பாதையை மூன்று பக்கமும் மறித்துவிட்டு பாதையில் அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பெருமளவிலான அமைதிப் படையினர் அங்கு வந்து சேர்ந்தனர். அமைதிப்படை அதிகாரிகள் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கதைத்தனர். அவர்களைத் திருப்திப்படுத்த முடியவில்லை. அரசாங்க அதிபர் வரவேண்டுமென்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

சிறிது நேரத்தின் பின்பு வடக்கு - கிழக்கு மாகாண சபையின் திருகோணமலை மாவட்ட உறுப்பினர்களான திரு. ஜோர்ஜ் தம்பிராசா, திரு. எஸ். கே. ரூபட், திரு. தயாபரன் ஆகியோர் அங்கு வந்து ஆர்ப்பாட்டக்காரருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

சுமார் 2 மணிவரை வீதியில் அங்கும் இங்கும் நின்றவாறே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஈற்றில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை [இன்று 21 ஆம் திகதி] பணம் தருவதாக வாக்குறுதி அளித்ததை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். [இ- 150]

## உடுத்துறை கொத்தணியில் ஆசிரியர் பற்றுக்குறை

வடமராட்சி கிழக்கில் உள்ள உடுத்துறை கொத்தணிப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை நிலவுகின்றது.

உடுத்துறை கொத்தணியில் உள்ள ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை வெற்றிலைக்கேணி றோ. க பாடசாலைவெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட மகாவித்தியாலயம் கட்டைக்காடு றோ.க. பாடசாலை கேவில் அ.த.க. பாடசாலை போக்கறுப்பு சி.சி. த.க. பாடசாலை ஆகியவற்றில் ஆசிரியர் பற்றுக்குறை பெருமளவில் காணப்படுகின்றது.

இக் கொத்தணியில் உள்ள கேவில் அ.த.க. பாடசாலை போக்கறுப்பு சி.சி. த.க. பாடசாலைகள் பல வருடங்களாக ஒருஆசிரியர்பாடசாலையாகவே இருந்துவருகின்றன. (ச-144)

### புதிய அதிபர்

மானிப்பாய் மெமோறியல் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக திரு. அ. மு. அருணாசலம் நியமனம் பெற்றுள்ளார். (ச - 90)

### சூராவத்தையில் விளையாட்டு விழா

சுன்னாகம் சூராவத்தை குழந்தைகள் விளையாட்டுக் கழகத்தினரின் வருடாந்தவிளையாட்டுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை நடைபெறுகின்றன.

சமாதான நீதவான் திரு. எம். செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ் விளையாட்டுப் போட்டியை அதிவண பிதா அல்பேர்ட் யோகராசா அடிகளார் ஆரம்பித்துவைக்கிறார்.

ஏழாலை மகா வித்தியாலய அதிபர் திரு. ஐயா நவரட்ணம் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கும் இவ் விளையாட்டு விழாவை திரு. எஸ். ஸ்ரீஆனந்தராசா ஒழுங்கு செய்துள்ளார். [இ-27]

## கசிப்பு உற்பத்தியாளர்களை இழுத்து வந்த மக்கள் குழுவினர்

காரைநகர், ஏப். 21

கசிப்பு உற்பத்தியாளர்களின் வீடுகளுக்குள் புகுந்த மக்கள் குழுவினர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவர்களை ஊர்வலமாக இழுத்து வந்தனர்.

இச்சம்பவம் காரைநகர் சிவகாமி அம்மன் கோவிலடியில் இடம் பெற்றது.

சம்பவதினம் மக்கள் குழுவினர் அப்பகுதியில் 5 கிராமங்களுக்குள் புகுந்து கசிப்பு வேட்டையில் ஈடுபட்டனர். கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தபோது பிடிபட்டோரே ஊர்வலமாக இழுத்துவரப்பட்டனர்.

முன்பு தண்டனை வழங்கியும் உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு மக்கள் குழுவினர் கடுந்தண்டனை வழங்கி கசிப்பால் அபிஷேகமும் செய்தனர். இனி கசிப்புகாய்ச்சுவதில் ஈடுபடமாட்டோம்'' என்ற உறுதி மொழிக்கு பிறகு அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

தற்போது மக்கள் குழு கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோரை தடுக்க மிகவும் விழிப்பாக இருந்து தகவல்களைச் சேகரித்து வருகின்றது.

மக்கள் குழுவினர் ஏறத்தாழ 400க்கு மேற்பட்டவர்களாகச் சென்றே கசிப்பு உற்பத்தியை தடுத்து வருகின்றனர். [இ-73]

## உடல் உள்ளம் இரண்டுக்கும் அமைதி தரும் யோகாசனம்

யோகத்தில் எட்டு வகை. அதிலே மூன்றாவது படி யோகாசனம். அட்டாங்க யோகம் என்று கூறப்படுவது இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று எண்வகைப் படும்.

இயமம் என்பது யாருக்கும் இம்சைபுரியாமை, சத்தியத்தைக் கடைப்பிடித்தல், களவு செய்யாமை, புலன்களை அடக்குதல், பொருள் ஆசையின்றி வாழ்தல்; நியமம் என்பது தூய்மை [உடல்,உள்ள] திருப்தி விரதங்கள் மேற்கொள்ளல்; வேதபாராயணம், இறைவனிடத்தில் தன்னை ஒப்படைத்தல்[சரணாகதி]; ஆசனம் என்பது தியானத்துக்கும் உடல்தூய்மைக்கும் உட்கொரும் முறை; பிராணயாமம் என்பது சிவசக்தியை ஒழுங்காக நடத்துதல்; பிரத்தியாகாரம் என்பது மனதைப் பிற பொருள்களில் செல்லவொட்டாது தடுத்து நிறுத்துதல்; தாரணை என்பது

### வெள்ளிப் படையல்

மனதை ஒரு நிலையில் நிற்கச் செய்தல்; தியானம் என்பது ஒன்றையே சிந்தித்தல்;சமாதி என்பது நனவு நிலைக்கு அதீதமான நித்திரை.

யோகாசனங்கள், எட்டுப் படிகளைக் கொண்ட யோகத்தில் மூன்றாவது படியாகும். யோகத்தின் குறிக்கோளாகிய ஞான நிலையை அடைய உள்ளப் பயிற்சியும் உடற்பயிற்சியும் அவசியம். இவ் விரண்டிலும் உள்ளப் பயிற்சியே சிறப்புடையது.

யோகாசனப் பயிற்சிகளை ஆரம்பிக்கும்போது ''ஓம்'' என்னும் பிரணவ மந்திரத்தை மூன்று முறை உச்சரித்தல் வேண்டும். அடுத்தபடியாக யோக மந்திரம் உச்சரித்தல் வேண்டும். பின்னர் யோக செபம் சொல்லுதல் வேண்டும்.

### யோகாசனம்

முதலாவதாக சாஷ்டாங்க தியானம் - கோவிலிலே நாம் விழுந்து கும்பிடுவது போன்று இரு கைகளையும் முன்பக்கமாக நீட்டி நெற்றி நிலத்தில் படும்படியாக படுத்திருந்து கொண்டு எல்லாம் வல்ல இறைவனுக்கும் பூரண சரணாகதி அடைதல் இதன் நோக்கமாகும். சாஷ்டாங்க தியானத்தை இரண்டு நிமிடம் வரை செய்யலாம்.

பின்னர் யோகாசனங்கள்: புஜங்காசனம், சலபாசனம், தனுராசனம், பஸ்சிமோத்தானாசனம், கலாசனம், சர்வாங்காசனம், விபரீதகரணி மச்சியாசனம், அர்த்த மச்சியேந்திராசனம், மயூராசனம், சக்ராசனம், பாதஸ் ஸ்தானம், அர்த்த சந்திராசனம் (பிறை ஆசனம்), திரிநோணாசனம், உட்டியாண, நௌலி, யோக முத்திராசனம், சிரசாசனம், சாந்தி ஆசனம்.

அடுத்தபடியாக பிராணயாமம்; பஸ்திரிக்கா, நாடி சுத்தி, பிரம்மறி, கபாலபதி இவற்றைச் செய்தல் வேண்டும். பிராணயாமம் செய்து முடிந்ததும் ஒரு பிரார்த்தனை செய்ய வேண்டும். பின்னர் மகா மிர்த்தியுஞ்ஜெய மந்திரம் உச்சரித்தல் வேண்டும். அந்த மந்திரம்:

''ஓம் திரையம் பகம் யஜா மஹே
சுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருக மிவ பந்தனாத்
மிர்த்தியோர் முக்ஷிய
மாமிக்தாத்''

வட மொழியில் உள்ள இம்

(6 ஆம் பக்கம் பார்க்க)




ரமழான் மாதத்தின் பின் நோன்பு ... சிறந்த நோன்பு ... மாதம் ... பத்தாம் நாள் வரும் ... நோன்பாகும். ... [illegible]

ஸஹர் முடிவு 4-26
நோன்பு திறக்கும் நேரம் 6-19

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மிளகாய்த் தூள்**

யாழ்ப்பாண முறைப்படியும் சுகாதார
முறைப்படியும் தயாரிக்கப்பட்டு
★ 100 gr பக்கட்
★ 1 kg பக்கட்
★ 2 kg பக்கட் நிறைகளில்
விற்பனையாகின்றது
தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு
★ விசேட கழிவு உண்டு ★
பெற்றுக் கொள்ளவேண்டிய இடம்:
**அண்ணா கோப்பிக் கடை.**
**யாழ்ப்பாணம்.**



# உதயன்

21 - 04 - 1989 வெள்ளிக்கிழமை



**உழுந்துமா**

பப்படம், தோசை, வடை முதலிய
தேவைக்கு பாவிக்கக் கூடிய முறையில்
சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும்
தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றது.
தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு
✶ விசேட கழிவு உண்டு. ✶
பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்:
**அண்ணா கோப்பிக் கடை,**
**யாழ்ப்பாணம்**


## தென்பகுதி பல்கலைக்கழகங்களை திறப்பது குறிந்து ஞாயிறு மாநாடு

கொழும்பு, ஏப்ரல் 21

தென் பகுதிப் பல்கலைக்கழகங்களைத் திறப்பது பற்றி முக்கிய மாநாடு ஒன்று வருகிற ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது.

உயர்கல்வி விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பத்துறை அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீது மாநாட்டுக்கு தலைமை வகிப்பார்.

வருகிற மாதம் 3 ஆம் திகதி தென்பகுதிப் பல்கலைக்கழகங்கள் அனைத்தையும் மீண்டும் திறக்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகக் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (ஓ-எ)

### யாழ்நோக்கி-----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்ததாக தகவல் கிடைத்தது. அதனால் சோதனையிட வேண்டும் என்று கூறி பஸ்ஸை சோதனையிட்டனர்.

சோதனை முடிந்த பின்னர் அவர்கள் எவரையும் அழைத்துச் செல்லவில்லை.

இதேவேளை கல்வீச்சின் போதே ஒருவர் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர் அளவெட்டிப் பகுதி கிராம சேவையாளரான கே. கந்தசாமி என்பவராவர்.

கல்லெறிந்தும் பஸ்ஸை மறித்தும் அது நிற்பாட்டப்படாததாலேயே பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டது. [ஓ-9]

### அச்சுவேலியில் சாரதி சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

கடந்த செவ்வாய்க்கிழமை அச்சுவேலியில் லொறிச் சாரதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் ''விச்சு'' என அழைக்கப்படுபவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-94)


வெகுவிரைவில் வெளிவருகின்றது

முல்லைத்தீவு **"பாடுமீன்"** மூவிஸாரின்
இரண்டாவது படைப்பு

# "வாழ்த்துங்கள்"

(வீடியோ படம்)

வீடியோ பட வரலாற்றில் முதன்முறையாக
கொழும்பு, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு
போன்ற இடங்களில் நடிக்கப்பெற்ற இப்படம்
பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில்
தயாரிக்கப்பட்டுள்ளது.

ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட
நடிகர்கள், நடிகைகள் இதில் நடிக்கின்றார்கள்;
ஈழத்து இளைஞர்களின் இந்த முயற்சிக்கு
ஆதரவு வழங்கி தொடர்ந்தும் பல
படைப்புக்களைப் படைக்க ஒத்துழைப்பு
வழங்குங்கள்.

ரைற்றிள்-எடிட்டிங்: **எவர்விஷன்** யாழ்ப்பாணம்.

படப்பிடிப்பு: **நாகா ஸ்ரூடியோ** முல்லைத்தீவு.

இசையமைப்பு:
**ஈழ நல்லூர் அருணா இசைக்குழுவினர்**

கதை வசனம், இயக்குநர்:
**A. P. M. தாஸன்**

'பாடுமீன்' மூவிஸ்,
அருளப்பு பில்டிங்,
முல்லைத்தீவு.

[10636]


## மரண அறிவித்தல்

### அல்பிரட் கந்தையா செல்வதுரை

வடலியடைப்பு பண்டத்தரிப்பு வாசியும் James Finlay and Company இல்) பிரதம களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவருமாகிய அல்பிரட் கந்தையா செல்வதுரை அவர்கள் 19 - 04 - 1989 இல் காலமாகி விட்டார்.

இவர் புனிதம் செல்வதுரை (விக்ரோறியாக் கல்லூரி, இளைப்பாறிய ஆசிரியை)யின் அன்புக்கணவரும், ஏஞ்சலீன் [லண்டன்], செல்வரஞ்சன் [மாலைதீவு], கெப்சி [Air Lanka], ஈவா (பேசாலை R. C. T. G. S], சல்வினி [லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கணேஸ், அஸ்பரி [லண்டன்], கமலா, தயசிறி, ஆகியோரின் அன்பு மாமனாரும், போல், டேவிட், பியூலா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான முத்தம்மா, செல்லம்மா, முத்தையா, முருகேசு ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கரத்தினம் ராஜசூரியர், சுகிர்தமலர் செல்லப்பு, தங்கமலர் கிருபைராசா (ஆசிரியை மட்டக்களப்பு), நவரத்தினம் (இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட் - ஷப்ரூ, உதயன்) அரியமலர் இராசரத்தினம், (இளைப்பாறிய ஆசிரியை), ஜீவமணி (ஆசிரியை), யோகம்மா, கண்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், வடக்கு அராலியில் பிறந்து, வடலியடைப்பில் வசிப்பவருமான முத்தம்மா பொன்னம்பலத்தின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 22 4-89ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பண்டத்தரிப்பு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருமதி புனிதம் செல்வதுரை**

'செல்வமியர்'
சங்கானை மேற்கு,
பண்டத்தரிப்பு.

(C/2226)

# இந்தியப் படையை வெளியேற்றுக!
# தேர்தல்களை உடன் ரத்துச் செய்க!!

## ஜே. வி. பி. மீண்டும் வலியுறுத்தி அறிக்கை

கொழும்பு, ஏப்ரல் 21

★ இந்திய அமைதிப் படையை உடனடியாக வெளியேற்றவேண்டும்.

★ ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் ஆகிய இரண்டையும் ரத்துச் செய்ய வேண்டும்.

★ மாகாண சபைகளையும் கலைக்கவேண்டும்.

இக் கோரிக்கைகளை மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) மீண்டும் வலியுறுத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையை மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் உபதிஸ்ஸ கமனாயக்கா 16-04-89 திகதியிட்டு வெளியிட்டிருக்கிறார்.

அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

ஒரு கையில் துப்பாக்கி ஏந்திக்கொண்டு மறுகையில் சமாதானத்துக்கு அழைப்பதால் எந்தவிதப் பயனும் ஏற்படப் போவதில்லை.

அரசாங்கம் தொடர்ந்து வெற்றுக் கோரிக்கைகளையே முன்வைத்து வருகிறது.

முன்னைய ஜனாதிபதி ஜெயவர்த்தன பிரச்சினைக்குத் தீர்வாக என்ன பயன்தராத முயற்சிகளை மேற்கொண்டாரோ அதனையே இன்றைய ஜனாதிபதி திரு. பிரேமதாஸாவும் மேற்கொண்டு வருகிறார்.

நாட்டில் ஜனநாயகமும் அமைதியும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் நாம் முரண்பட்டவர்கள் அல்லர். ஆனால் அந்த ஜனநாயகமும் அமைதியும் உண்மையானவையாகவே இருக்கவேண்டும் என்பதுதான் எமது குறிக்கோள்.

இப்படியானதொரு சூழ்நிலை ஏற்படவேண்டுமானால் அதற்கு உரிய சரியான பாதையில் சகலரும் முரண்பாடு இல்லாமல் போகவேண்டும்.

அரசு இவ்விடயத்தில் சரியான நிலைப்பாட்டை உறுதியாகத் தெரிவிக்காத வரையில் பேச்சுக்கள் என்பது பயனற்றதாகவே அமையும் என்பதை நாம் தொடர்ந்து பல தடவைகள் தெரிவித்து வந்துள்ளோம். அதனையே இப்போதும் நாம் வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

நாட்டில் நிரந்தர அமைதியும் சமாதானமும் நிலைபெற வேண்டுமானால் நாம் ஏற்கனவே முன்வைத்த செயற்பாடுகள் ஒன்றுகூட விடப்படாமல் நடைமுறைச் சாத்தியமாக வேண்டும்.

அந்தச் செயற்பாடுகள் எவை என்பதை மீண்டும் எடுத்துக்காட்ட விளைகின்றோம்.

★ தேசிய ஒருமைப்பாடு, இறைமை என்பவற்றை ஒழிக்கும் அனைத்து ஒப்பந்தங்களையும் அகற்றுவதுடன் அப்படியான ஒப்பந்தம் ஒன்றின்படி நாட்டின் வடக்கு - கிழக்கில் நிலைகொண்டுள்ள இந்திய அமைதிப்படை உட்பட சகல வெளிநாட்டுப் படைகளையும் உடனடியாக வெளியேற்ற முடியும்.

★ ஊழல், துஷ்பிரயோகம், பலாத்காரம் ஆகியவற்றால் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகிய இரண்டையும் ரத்துச் செய்யவேண்டும். அதேபோல் ஜனநாயக விரோதமாக ஏற்படுத்தப்பட்ட மாகாணசபைகள் கலைக்கப்பட வேண்டும்.

★ சுதந்திரமானதொரு நம்பிக்கைச் சபையின் கீழ் சுதந்திரமான பாரபட்சமற்ற முறையில் சகலரும் பங்கேற்கக் கூடிய விதத்தில் ஜனநாயகத் தேர்தல்களை நடத்த வேண்டும்.

★ நாடு முழுவதும் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வரும் கொலைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

அத்துடன் அதற்காக பயன்படுத்தப்படும் இராணுவம், பச்சைப்புலி, கறுப்புப் பூனைகள் உட்பட சகல படைகளும் கலைக்கப்பட வேண்டும்.

★ தேசப்பிரேமிகளை அழிக்கும் செயலில் ஈடுபட்டதற்காகப் பதவி உயர்வு வழங்கப்பட்ட அனைத்து அதிகாரிகளினதும் பதவி உயர்வு, ஏனைய சலுகைகள் ரத்துச் செய்யப்படவேண்டும்.

★ பயங்கரவாதத் தடைச் சட்டம் உட்பட சனநாயக விரோத சட்டங்கள் அனைத்தும் உடனடியாக ரத்துச் செய்யப்பட வேண்டும்.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

யுத்தத்தை நிறுத்தி பேச்சு நடத்த வருமாறு ஜனாதிபதி பிரேமதாஸா விடுத்த அழைப்புக்குப் பதிலாக அமையும் விதத்தில் திரு. கமனாயக்காவின் அறிக்கை அமைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ எ)

## மலையக ரயில் தடம்புரண்டது ஒருவர் பலி; 20 பேர் காயம்

கொழும்பு, ஏப்ரல் 21

அட்டனுக்கும் கொட்டகலைக்கும் இடையில் நேற்று பயணிகள் ரயில் தடம் புரண்டதில் ஒருவர் பலியானார். 20 பேர் காயமடைந்தனர்.

இந்த ரயிலில் பயணிகள் பெட்டியுடன் எரிபொருள் கொள்கலன்களும் இணைக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது.

இந்த விபத்தை அடுத்து கொழும்பு — பதுளை ரயில் சேவை நேற்று ரத்துச் செய்யப்பட்டது. (ஓ)

### இந்தியப் படை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உருவாகிவரும் புதிய சூழ்நிலைக்கு ஏற்ப இந்தியாவின் அர்த்தமுள்ள நடவடிக்கையாக இது இருக்கும் என்றும் ''இந்து'' செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய வட்டாரங்களின்படி இதுபற்றி இரு அரசாங்கங்களுக்கும் இடையே முறையான தொடர்புகள் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை என்றும் 'இந்து' தெரிவித்தது. (ஓ-எ)

### ஆழியவளை------

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள காடுகளும் சுற்றிவளைக்கப்பட்டன.

துப்பாக்கி வேட்டுக்களும், ஷெல் வீச்சுக்களும் காட்டுப் பகுதியில் கேட்ட வண்ணமிருந்தன.

அன்றைய தினம் ஆழியவளையில் ஒரு குடும்பஸ்தரும், உடுத்துறையில் ஓர் இளைஞரும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகி யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

சிலர் விசாரணைக்காக முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு மறுநாள் விடுவிக்கப்பட்டனர். (ஓ-144)

### மினிபஸ்..-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வுகளும் உயர்ந்துள்ளன.

அத்துடன் எரிபொருள் விலை அதிகரிப்பும் எம்மைப் பெரிதும் பாதிக்கும். ஆயினும் கட்டணத்தை அதிகரிக்கும் உத்தேசம் எமக்கு இல்லை. ஆனால் எதிர்காலத்தில் வ. பி. போ. சபை கட்டணங்களை அதிகரித்தால் நாமும் அதிகரிப்போம்.

அவ்வாறு தாம் அதிகரிப்பதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கும் வரை எவரும் கட்டணத்தை அதிகரிக்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுள்ளார்.

எவராவது அதிகரித்த கட்டணத்தை வசூலித்தால் பிரயாணிகள் உடனே எமது சமாசத்திடம் முறையிட்டால் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். [illegible]

### மட்டக்களப்புக்கு மீண்டும் பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

வடபிராந்திய போக்குவரத்துச் சபை மட்டக்களப்பிற்கான பஸ் சேவையை மீண்டும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்க உள்ளது.

திங்கட்கிழமை காலை 6.15 க்கு யாழ் பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் பஸ் பொலன்னறுவை ஊடாகப் பயணத்தைத் தொடரும் என அறிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

### பேச்சு வார்த்தை--.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்து ஜனநாயக தாற்பரியங்களுக்கு அமைய அனைவரையும் சரிசமமாக நடத்த வேண்டும். பெரும்பான்மை சிறுபான்மை என்று பேதம் பாராட்டக் கூடாது.

இந்த நோன்மதி தினத்தன்றே புத்தபெருமான் துளோதர, மகோதர ஆகிய இரு மன்னர்களுக்கு இடையே ஏற்பட்ட சச்சரவைத் தீர்ப்பதற்காக இலங்கை வந்திருந்தார்.

#### முக்கிய நிகழ்ச்சி

எமது பிரச்சினைகளை தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நான் இன்றைய நாகதீப விஜயத்தை ஒரு முக்கிய நிகழ்ச்சியாக கருதுகின்றேன்.

புத்தபெருமான் காட்டிய வழியிலேயே சமரச முயற்சிகளை ஜனாதிபதி பதவி ஏற்ற பின்னர் நான் எடுத்து வருகின்றேன்.

—இப்படி ஜனாதிபதி தெரிவித்தார்.

வண. தம்மகீர்த்தி தேரர், வண. டாக்டர் வல்பொல ராகுல தேரர் ஆகியோர் சிங்களத்திலும், வண. சீவலித்த தேரர் தமிழிலும் அனுசாசன உரை நிகழ்த்தினர்.

ஸ்ரீலங்கா கடற்படையினரும், ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். [அ-எ]

### உடல் உள்ளம்.....

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மந்திரத்தின் பொருள்: ''முக்கண்ணையுடைய சிவ பெருமானை, நாங்கள் தங்களை வணங்குகிறோம். நறுமணம் நிரம்பியவரே, எமக்கு உணவளித்து எம்மை புஷ்டியாக்குபவரே, வெள்ளரி எவ்விதம் பழுத்ததும் கொடியை விட்டுக் காய் விலகுகிறதோ அவ்விதமே சாவில் முடியக் கூடிய இந்தப் பந்த பாசங்களிலிருந்து எம்மை விடுவித்து, பெரிய அமிர்தம் போன்ற முக்தியை, மோட்சத்தை, பேரின்பத்தை எமக்கு அளிப்பீர்களாக என்பதாகும்.

கடைசியாக, தியானம் 2 நிமிடம் செய்ய வேண்டும். படிப்படியாக 2 நிமிடத்திலிருந்து 5 நிமிடம் வரை செய்தல் வேண்டும். தியானம் செய்வதினால் மனதுக்கு மட்டுமல்ல, உடலுக்கும் அமைதி கிடைக்கிறது.

-வ. [illegible]

## மரண அறிவித்தல்கள்

### விசுவலிங்கம் நவரட்ணசிங்கம் (நவம்)

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த விசுவலிங்கம் நவரட்ணசிங்கம் (நவம்) காலமானார். இவர் ஞானவல்லியின் அன்புக்கணவரும் காலம் சென்ற விசுவலிங்கம் ஆச்சிக்கண்ணுவின் சிரேஷ்ட புத்திரனும் காலம் சென்ற ஓமந்தை தேசிங்குராசா கமலாம்பிகையின் அன்பு மருமகனும் புவிவேந்தன், நவரஜனி, பூமாசினி, ஸ்ரீவேந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையாரும் மகாலிங்கத்தின் பெருமகனும் இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, தங்கராணி, சரோஜினிதேவி பரமேஸ்வரி, ஞானம், லோகநாதன் (கனடா) ஜம்போதரநாதன் (கனடா) ஆகியோரின் சகோதரரும் நடேசபிள்ளை கதிர்காமநாதன், மகேந்திரன், கேதீஸ்வரன், காலம் சென்ற விசுவலிங்கம், இராசரெத்தினம் தேவராஜா (சவறின் இன்டஸ்றீஸ், கொழும்பு) நாகராசா (அபிரா குயின்ஸ் தெமட்ட கொடை), சிவகுமாரன், சிவநேசன், கிருஷ்ணபவானி, நாகேஸ்வரன், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22-04-89ஆம் திகதி சனிக்கிழமை மு. ப 9.00 மணிக்கு மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
**நா. சுந்தரராசா**

[10642]

### திருமதி செல்வராசா சிவபாக்கியம்

திருமதி செல்வராசா சிவபாக்கியம் காலமானார். மூளாய்ரோட் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி செல்வராசா சிவபாக்கியம் காலஞ்சென்ற செல்வராசா அவர்களின் மனைவியும், குமாரசாமி பொன்னம்மாவின் அன்பு மகளும், சிவானந்தன் (பராசக்தி அச்சகம், கொக்குவில்), சிவதாஸன் (சவுதி அரேபியா), சிவனேசராசா, வாசுகி, வனிதா ஆகியோரின் அருமைத் தாயாரும், கதிர்காமு (P. W. D.), காலஞ்சென்ற சாமிநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரஸ்வதி, கீதாவின் மாமியாரும், சிந்துஜா, உதயப்பிரியா, லக்சியாவின் பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-4-89 இன்று வெள்ளிக்கிழமை 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய்ரோட்,
வட்டுக்கோட்டை,

தகவல்:
**S. சிவானந்தன்**

[223]

### திருமதி மாணிக்கம் பாக்கியம்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த மாணிக்கம் பாக்கியம் அவர்கள் 19-4-1989 புதன்கிழமை அன்று இரவு இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. ஆறுமுகம் மாணிக்கம் அவர்களின் அன்பு மனைவியாவார். கைலாயபிள்ளை (கனடா), சுப்பிரமணியம் (மாணிக்கம் அன் சன்ஸ் இல 101, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-13), சிவபாதந்துரை (வர்த்தகர் 115 A, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-13), இராசலிங்கம் [வர்த்தகர், தெல்லிப்பளை], இரத்தினலிங்கம் (T.A, கனடா), சிவச்சந்திரன் [பொறியியலாளர், அவுஸ்திரேலியா], யோகேஸ்வரி [ஆசிரியை, குணபாலன் வித்தியாசாலை, உயரப்புலம் ஆனைக்கோட்டை] ஆகியோரின் அன்புத்தாயும், சு. இரத்தினராசா [கல்வியதிகாரி, கல்விக்கந்தோர் கண்டி] சரோஜினிதேவி, மாலதி, கமலாதேவி, வரதாமணி, கோகிலவாணி. தயாழினி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற சி.க. கணபதிப்பிள்ளை (பிரபல வர்த்தகர்], திருமதி. செல்லத்துரை இரத்தினம் ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 22-4-89 சனிக்கிழமை பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

''மாணிக்கம்''
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
மா. இராசலிங்கம்.

[10645]

### விசுவலிங்கம் நவரட்ணசிங்கம்

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த விசுவலிங்கம் நவரட்ணசிங்கம் அகால மரணமானார்.

அன்னார் விசுவலிங்கம் ஆச்சிக்கண்ணு அவர்களின் புத்திரனும், தேசிங்கராசா, கமலாம்பிகை [ஓமந்தை], ஆகியோரின் மருமகனும், ஞானவல்லியின் அன்புக்கணவரும், புவிவேந்தன், நவரஜனி, பூமாசினி, ஸ்ரீவேந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, தங்கராணி, சரோஜினிதேவி, பரமேஸ்வரி, கிருஷ்ணபவானி, லோகநாதன் (கனடா), ஜம்போதரநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடேசபிள்ளை, கதிர்காமநாதன், மகேந்திரன், கேதீஸ்வரன், தேவராசா (சவரின் இன்டஸ்றீஸ் கொழும்பு), நாகராசா, சிவகுமாரன், சிவநேசன், கிருஷ்ணபவானி, நாகேஸ்வரன், ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 22-04-89ஆம் திகதி சனிக்கிழமை மு. ப. 9-00 மணிக்கு மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

தகவல்:
**தே. தேவராசா**
மைத்துனர்.

(222)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 21 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.